அதிவீரராமபாண்டியன்கூறிய

வெற்றிவேற்கையென்னும்

நறுந்தொகைக்கு

முகவை,

இயற்றமிழாசிரியராகிய

இராமாநுசகவிராயர்

செய்த

காண்டிகையுரை.

இது,

ஸ்ரீவரதா அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

௲அ௱௪௭-ம்-வரு-பிபர்வரிமீ-

இதன்விலை-அணா-௩.

அதிவீரராமபாண்டியன்கூறிய

நறுந்தொகை.

இதற்கு- இந்நூலின் சிறப்புப்பாயிர முகத்
து நின்ற, வெற்றிவேற்கையென்னுஞ் சொல்லை
யேயிந்நூற்குப்பெயராக விக்காலத்து வழங்கு
கின்றனர்.

பிரணவப்பொருளாம்பெருந்தகை யைங்கரன்
சரணவற்புதமலர் தலைக்கணிவோமே. *

இது பொதுப்பாயிரம்- இதன் பொருள்,
பிரணவப்பொருளாம் பெருந்தகை - பிரணவ
மென்னு மந்திரார்த்தஸ்வரூபராகியபெருந்த
ன்மையையுடைய, ஐங்கரன்- ஐந்துகரங்களையு
டையவராகியவிநாயகரது, சரணவற்புதமலர்-
பாதங்களாகிய ஆச்சரியகரமாயிருக்கின்ற செ
ய்யதாமரைமலர்களை, தலைக்கணிவோம்-சிரசுக்
கலங்காரமாகத் தரிப்போம் யாம் என்றவாறு.
ஏகாரமீற்றசை,

இவ்வாறு அதிவீரராமபாண்டியன் வழிபடு
கடவுளை வணங்கியதனு லிந்நூலினிது முடியு
மென்பது கருத்து. இப்பாயிரஞ் செயப்படு
பொருளின்றி நிற்றலாற் பொதுப்பாயிரமென
க்கொள்க.

வெற்றிவேற்கைவீரராமன், கொற்கையாளி
குலசேகரன்புக, னற்றமிழ் தெரிந்த நறுந்
தொகைதன்னாற், குற்றங்களைவோர்குறைவி
லர்தாமே. *

(இ-ள்,) கொற்கையாளி - கொற்கையெ
ன்கின்றவூரையாள்பவனாகிடும், குலசேகரன் - த
ன்குலத்துக்கொருகிரீடம்போற்சிறந்தவனாகியு
ம், (இருக்கின்ற) வெற்றிவேற்கை வீரராமன் -
விசயத்தைத்தரும் வேலாயுதத்தைத்தரித்தகை
யிணையுடைய அதிவீரராமபாண்டியனானவன்,
புகல் - சொன்ன, நற்றமிழ்தெரிந்த - நல்லதமி
ழாகியகடலிலேயாய்ந்தெடுத்த, நறுந்தொகை
தன்னால் - (நன்மணித்திரள்போன்ற) விந்நறு
ந்தொகையென்னுநீதிமொழிகளாலே, குற்றங்
களைவோர் - உயிர்களிடத்துண்டான குற்றங்க
ளைப்போக்குவோர், குறைவிலர்தாமே - (தங்கு
றைகளையொருவர் தீர்க்கவேண்டாது) தமக்கு
த்தாமேகுறைதீர்ந்தவராவர், எ-று.

குறைதீர்ப்பவருந் தீர்க்கப்படுபவருமாகிய விருதி
றத்தாருள் தீர்ப்பவரைப் பிரித்து நிற்றலால் - ஏகாரம்பிரிநி
லைக்கண்வந்தது, நறுமை - நன்மை, தொகை - தொகை
மொழி, படுத்ததுநித்திரைபண்ணுதற்காதலாற் படுத்து
நித்திரைபண்ணினனெனமிகைபடக்கூறுது படுத்தானெ
ன்றற்போல, தெரிந்தது எடுத்தற்காதலால், தெரிந்தெ
டுத்தவெனமிகைபடக்கூறுது தெரிந்தவென்றார், நற்றமி
ழ்தெரிந்தநறுந்தொகையெனவே நற்றமிழாகியகடலி

லேயாராய்ந்தெடுத்த நன்மணித்திரள்போன்ற நறுந்தொகைமொழிகளென்பதுபெற்றாம்; நறுந்தொகையென்னுங்களைகளையுங்கருவியாலுயிர்களாகிய பைங்கூழின் குற்றங்களாகிய களைகளைப்பறித்தெறியுமரசராகியவுழவர் குறைவிலரென நின்றமையானிது இயைபுருவகவலங்காரமெனக்காண்க. (குறள்.)

குடிபுறங்காத்தோம்பிக்குற்றங்கடிதல்,
வடுவன்றுவேந்தன்றொழில்.

என்றாராதலாலிது அரசரைநோக்கிற்று. இதன்கருத்து விளங்கிற்று. இந்நூல்செய்தோனித்தொகுதிற்கு உடையவனாதலா லிவ்வாறுகூறுதற் கியைந்ததெனக்காண்க. இது சிறப்புப்பாயிரம்.

எழுத்தறிவித்தவனிறைவனாகும், *

(இ-ள்.) எழுத்தறிவித்தவன் - ஒருவனுக்கு எழுத்தொடுகூடிய இலக்கண இலக்கிய நூல்களை யறிவித்த ஆசிரியன், இறைவனாகும் - கடவுளாம்; எ-று. எழுத்து - ஆகுபெயர், எழுத்தறியத் தீருமிழிதகைமைதீர்ந்தான் மொழித்திறத்தின் முட்டறுப்பானாகு மொழித்திறத்தின் - முட்டறுத்து நல்லோர் மொழிந்தமறைநூலாய்ந்து கட்டறுத்துவீடுபெறும். என்றாராதலால், எழுத்தறிதல் கடவுளையறிதற்கும் வீடுபெறுதற்குங் காரணமாமாதலால் அதனையறிவித்தோனைக் கடவுளென்றது ஆகுபெயரென்றார், அக்கடவுள்பிறர்கடவுள் தன்கடவுள் ஆசிரியனென்பது இதன் கருத்து.

இன்னுமாசிரியனைத்தெய்வத்தின்மதித்தறிபொன்றி ன்மையெனப்பிறருங்கூறுதல்காண்க. இனி,

உடையார்முனில்லார்போலேக்கற்றுங்கற்றார்,
கடையரேகல்லாதவர்.

எனக்கூறியதிருவள்ளுவனார்க்குமிதுவேகருத்தென்பதை உடையார்முனில்லார்போலேக்கற்றுமென்றதனாலுங்காண்க. (ரு)

கல்விக்கழகுகசடறமொழிதல், *

(இ-ள்.) கல்விக்கழகு- இவ்வாறெழுத்தறிவிக்கப்பட்ட ஒருவனுடையகல்விக்கு அழகாவது, கசடறமொழிதல் - (தன்னைவழிபட்டுக் கேட்போர்க்குக்) குற்றமறச்சொல்லுதலாம். எ-று, அவ்வாறுசொல்லாவிடின் இகழப்படுவானென்பதுகருத்து. உ-ம்,

இணருழ்த்துநாறுமலரனையர்கற்ற,
துணர்விரித்துரையாதார்.

எனத்திருவள்ளுவனருங்கூறுதல்காண்க. (௨)

செல்வர்க்கழகுசெழுங்கிளைதாங்குதல், *

(இ-ள்.) செல்வர்க்கழகு- செல்வமுற்றோர்க்கு அழகாவது, செழுங்கிளைதாங்குதல்- தமதுவளம்பொருந்திய சுற்றத்தாருடைய குடும்பபாரத்தைச்சுமப்பதாம். எ-று. அப்பாரத்தைச்சுமைதாங்கியைப்போற் சுமந்து அக்குடும்பத்திற்குச்சுகந்தருவதே செல்வமுற்றதற்குப் பயனென்பதுகருத்து. உ-ம்,

சுற்றத்தாற்சுற்றப்படவொழுகல் செல்வந்தான்,
பெற்றத்தாற்பெற்றபயன். எ-இ-க. (௩)

வேதியர்க்கழகு வேதமு மொழுக்கமும், ✻

(இ-ள்.) வேதியர்க்கழகு - அந்தணர்க்கு அழகாவன, வேதமும் - வேதமோதலும், ஒழுக்கமும் - தமது ஒழுக்கங்குன்றாது நிற்றலுமாம், எ-று. இவ்விரண்டுங்குன்றின் அவர்பிறப்புக்குன்றுமென்பது கருத்து. உ-ம்,

மறப்பினு மோத்துக்கொளலாகும்பார்ப்பான்,
பிறப்பொழுக்கங்குன்றக்கெடும். எ-இ-௬.

இதனுள், ஓத்துமறப்பினுமென்சொல்லியாது மறப்பினுங்கொளலாகுமென்றது மறந்தாலவர்பிறப்புக்கெடுமென்பதுநோக்கி யெனக்காண்க. (௪)

மன்னர்க்கழகு செங்கோன் முறைமை, ✻

(இ-ள்.) மன்னர்க்கழகு - அரசர்க்கழகாவது, செங்கோன்முறைமை - செவ்வியகோல்போன்ற அரசநீதிமுறைமையைச் செலுத்துதலாம், எ-று. உ-ம்,

மன்னர்க்குமன்னுதல்செங்கோன் மையஃதின்றேல்,
மன்னாவா மன்னர்க்கொளி. எ-இ-தி-க- (௫)

வணிகர்க்கழகு வளர்பொருளீட்டல், ✻

(இ-ள்.) வணிகர்க்கழகு - வைசியர்க்கழகாவது, வளர்பொருள் - (கொள்வதுங்கொடுப்பது மாகியவிரண்டினும் நடுவுநிலைமை தப்பாதநிலைதானே) வளர்கின்றபொருளை, ஈட்டல் - மேன்மேலுஞ்சேர்த்துவைத்தலாம், எ-று. இவ்வாறுசேர்த்துவைத்தார்க்கு மற்றைத்தருமங்களு

யின்பங்களு மெளியபொருள்களாய் அவனாய ழகுசெய்யுமென்பதுகருத்து. உ-ம்,

ஒண்பொருள்காழ்ப்பவியற்றியார்க்கெண்பொரு,
ளேனையிரண்டுமொருங்கு. எ-இ-க. (௬)

உழவர்க்கழகேருழுதூண்விரும்பல், ※

(இ-ள்.) உழவர்க்கழகு - பூவைசியர்க்கழகாவது, ஏருழுதூண்விரும்பல் - (ஒருவர்பின் சென்றுதொழுதுண்பதை விரும்பாமல்) ஏரினாலே நிலமுழுதுபயிர்ச்செய்துண்பதையேவிரும்புதலாம், எ-று. விரும்பினால்இவரேரின்பின்செல்வதன்றி யொருவர்சீரின் பின்செலவேண்டாதேவாழ்வரென்பதுகருத்து. உ-ம்,

உழுதுண்டுவாழ்வாரேவாழ்வார் மற்றெல்லாந்,
தொழுதுண்டுபின்செல்பவர். எ-இ-க. (எ)

மந்திரிக்கழகுவருபொருளுரைத்தல், ※

(இ-ள்.) மந்திரிக்கழகு - அமைச்சனுக்கழகாவது, வருபொருளுரைத்தல் - தான்வருங்காரியங்களைமுன்னறிந்து அரசன் அறியானாயினுமவனுக்கு உறுதியாகச்சொல்லுதலாம். எ-று, இது அவனுக்கழகாவது-தான்குற்றத்தினீங்குதலெனக்கொள்க. இ-று. உ-ம்,

அறிகொன்றறியானெனினுமுறுதி,
யுழையிருந்தான்கூறல்கடன். எ-இ-க-
அறிகொன்று - அறிந்துசொன்னதையுந்தள்ளி, (அ)

தந்திரிக்கழகுதறுகணாண்மை. ※

(இ-ள்.) தந்திரிக்கழகு - படைத்தலைவனுக்கழகாவன, தறுகண் - (போர்செயுங்கால்) இரக்கமில்லாதிருத்தலாகியபேராண்மையும், ஆண்மை - மிக்கஉபகாரியாந்தன்மையாகிய வூராண்மையுமாம், எ-று. ஊராண்மை - ஆண்மையெனக்குறைந்துநின்றது. போர்செயுங்காற்பகைவர்மேலிரக்கம்வையாது போர்புரிதலும் போர்புரியுங்கால் அவர்க்கொருதாழ்வுவந்தால் தற்கிரங்கியுதவிசெய்தலுந்தருமமாமாதலால் அழகென்றார். இ-று.உ-ம்,

பேராண்மையென்பதறுகணொன்றுற்றக்கா,
லூராண்மைமற்றதனெஃகு. எ- இ- க-

ஊராண்மை - மிக்கவுபகாரியாந்தன்மை, அது - இலங்கையர்கோன்றனது சேனையெல்லாமடிந்துதான் - தனியேநின்றதுகண்டிரங்கியின்றும்போய்நாளைவாவென்று அயோத்தியர்கோமான் சொல்லிவிடுத்ததுபோல்வது. தந்திரம்- சேனை, தந்திரி- தானைத்தலைவன், (௬)

உண்டிக்கழகுவிருந்தோடுண்டல், *

(இ-ள்.) உண்டிக்கழகு- போசனத்திற்கழகாவது, (போசனஞ்செய்பவனுக்கழகாவது) விருந்தோடுண்டல்- விருந்தினரோடுகூட இருந்துண்பதாம், எ-று. தனித்துண்பதற்குவறுமையுமிழிவுமுண்டாமாதலால் விருந்தோடுண்டல் அழகாயிற்று. இ-று.உ-ம்,

இரத்தலினின்னாதுமன்றநிரப்பிய,
தாமேதமியருணல்.

னைத்தனித்துண்டல் வறுமையுமிழிவுந்தந்து நிற்றற்குக் காரணங்காண்க, இதனுள்- நிரப்பியவென்றதற்குப்பொருள் தம்வயிற்றை நிரப்பும்பொருட்டென ஒத்திருக்குடியுளாயி லுரைத்தபடி கொள்க. (௰)

பெண்டிர்க்கழகெதிர்பேசாதிருத்தல், *

(இ-ள்.) பெண்டிர்க்கழகு - மாதர்க்கழகாவது, எதிர்பேசாதிருத்தல் - புருடனெதிர்நின்று பேசாதடங்கியிருப்பதாம், எ-று. எதிர்நின்று பேசுமடங்காமையை யவரைத் தாழச்செய்தலாற் பேசாதடங்குந்தன்மையவரைமேன்மேலுமுயர்த்தி அழகுசெய்யுமென்பதுகருத்து. இது குலமாதர்விலைமாதரென்னு மிருதிறத்தார்க்கும்பொதுப்படநின்றது. உ-ம்,

அடக்கமமரருளுய்க்குமடங்காமை,
யாரிருளுய்த்துவிடும். ஏ- இ க- (௰௧)

குலமகட்கழகுதன்கொழுநனைப்பேணுதல்,

(இ-ள்.) குலமகட்கழகு - குலத்திலேவிவாகஞ்செய்யப்பட்ட மனையாட்டிக்கு அழகாவது, தன் - தன்னையும், கொழுநனை - கணவனையும், பேணுதல்- பாதுகாத்தலாம், எ-று. தன்-னென்ற இடத்து- ஐயுரும் எண்ணும்மையுந்தொக்குநின்றன, பொதுப்படப்பேணுதலென்றதனால் - தன்னைக்கற்பிலேவழுவாமலும்- கணவனை- அவன்சொல்லிலும் உணவுமுதலிய வுபசாரங்களிலும் வழுவாமற்பாதுகாத்தலெனவுங்காண்க.

இவ்வாறுபொறுத்தலே கற்பிற்கு இலக்கண மாதலாலழகாயிற்று. இவற்றுள் வழுவாமற்பா துகாப்பவளே கற்பாட்டியென்பது கருத்து.

உ-ம்,

தற்காத்துத்தற்கொண்டாற்பேணித்தகைசான்ற
சொற்காத்துச்சோர்விலாள்பெண். எ-இ-க. (௫௬)

விலைமகட்கழகுதன்மேனிமினுக்குதல், *

(இ-ள்.) விலைமகட்கழகு - வேசிக்கழகாவது, தன்மேனிமினுக்குதல் - தனதுடல்வடிவைமஞ் சள் பரிமள மலராடையாபரணங்களாலே விள ங்கச்செய்தலாம், எ-று. அவள்தெய்வமகளிரை ப்போல்நின்று அறிவிலாப்புருடரைமயக்கி வ ஞ்சிப்பதற்கு அம்மினுக்குதல்காரணமாதலா ல் அழகென்றார். அவளுக்கழகாயினுமது அறிவிலாரை மயக்கிக்கொல்லுதற் கேதுவாத லால் அவர்க்குவிடமாமென்பது இதனுட்கரு த்து. உ-ம்,

ஆயுமறிவினரல்லார்க்கணங்கென்ப
மாயமகளிர்முயக்கு. எ-இ-க.

தம்மேனிமினுக்கிமாயமகளிரறிவிலாரைத்தீண்டுவது - காமநெறியா லுயிரைக்கொள்ளவந்த தெய்வமகளிர்தீ ண்டுவதுபோலுமென்பரெனக்கொண்டுதாரணங்கா ண்க. (பரி.)

அறிஞர்க்கழகுகற்றுணர்ந்தடங்கல், *

(இ-ள்.) அறிஞர்க்கழகு - அறிவுடையோர்க்

கழகாவது, கற்றுணர்ந்தடங்கல்- கற்கவேண்டியநூல்களையெல்லாங்கசடறக்கற்றுத்தேர்ந்து மனமொழிமெய்களடங்கியிருப்பதாம், எ-று. கற்றுணர்ந்தடங்காமை பேதைமையாதலாற்கற்றுணர்ந்தடங்கலழகென்றார். இவ்வாறடங்கியிருப்பதற்குப்பயன் அறக்கடவுளேவல்செயுமென்பதாம். இ-று. உ-ம்,

கதங்காத்துக்கற்றடங்கலாற்றுவான்செவ்வி,
யறம்பார்க்குமாற்றினுழைந்து. எ - இ - க.

இச்சூத்திரத்துள் அடங்கலென்பதனுள் மனத்தின்கண் வெகுளிதோன்றாமற் காத்தலுமடங்கிநிற்றல்காண்க. ௰௬

வறிஞர்க்கழகுவறுமையிற்செம்மை, *

(இ-ள்.) வறிஞர்க்கழகு - தரித்திரர்க்கழகாவது, வறுமையிற்செம்மை- வறுமைக்காலத்திலுமொழுக்கமும் நாணுங்கெடாதிருத்தலாம். எ-று. செம்மையென்றதனால் - ஒழுக்கமு நாணுங்கெடாதிருத்தலென்பது பெற்றும், என்னெனின், வறுமைவந்ததென்று ஒழுக்கத்தைக்கைவிட்டாற்குலத்தார் நிந்திப்பார், நாணத்தைக்கைவிட்டால் அறக்கடவுள்காயும் ஆதலாலிரண்டையும்விடாதிருத்தலே செம்மையென்க. இ-று. உ-ம்,

குலஞ்சுடுங்கொள்கைபிழைப்பினலஞ்சுடு,
நாணின்மைநின்றக்கடை.

ஆதலால் வறுமையிற்செம்மையெனச்சொன்று ஒட்டுந

லால் - திருவள்ளுவனாருமிவ்வாறுகூறினாரெனக்காண்க. கொள்கை - ஒழுக்கம், இதற்குப்பரிமேலழகர்குலத்தைக்கெடுக்கும் நலத்தைக்கெடுக்குமெனப்பொருள்கூறினார். குலஞ்சுடுதல்- குலத்தார்நாவினாற்சுடுதல், ஆறாதேநாவினாற்சுட்டவடு- எனவருதலிற்காண்க- நலம்-அறம், அன்பிலதனை யறங்காயும்- எனவருதலால். நலஞ்சுடும் - அறக்கடவுள்காயும், எனக்காண்க. (௰௫)

தேம்படுபனையின்றிரள்பழத்தொருவிதை, வானுறவோங்கிவளம்பெறவளரினு, மொருவற்கிருக்கநிழலாகாதே, தெள்ளியவாலின்சிறுபழத்தொருவிதை, தெண்ணீர்க்கயத்துட்சிறுமீன்சினையினு, நுண்ணிதேயாயினு, மண்ணலியானை, யணிதேர்புரவியாட்பெரும்படையொடு, மன்னர்க்கிருக்க நிழலாகும்மே, ஆதலால் - பெரியோரெல்லாம்பெரியருமல்லர், சிறியோரெல்லாஞ்சிறியருமல்லர், பெற்றோரெல்லாம்பிள்ளைகளல்ல, ருற்றோரெல்லாமுறவினரல்லர், கொண்டோரெல்லாம்பெண்டிருமல்லர். *

(இ-ள்.) தேம்படுபனையின்- தித்திப்புண்டாகியபனையினது, திரள்பழத்தொருவிதை - திரண்டகனியினுள்ள வொருவித்தானது, வானுறவோங்கி - ஆகாயத்தைமுட்டவுயர்ந்து, வளம்பெறவளரினும் - செழுமையுண்டாகவளர்ந்தாலும், ஒருவற்கிருக்கநிழலாகாதே - ஒருவ

றுக்காயினுமிருக்கும்படி நிழலிராது, ஈகார
ம்நறசை - தேம்பற்றிரள்பழத்தெனக்கூட்டுக.
தெள்ளிய - விளா - ஆலமரத்தினது தெளிவாகி
ய சிறுகனியினுள்ளமொருவித்தானது, ஆலின்
தெள்ளிய சிறுபழத்தெனக்கூட்டுக, தெண்ணீ
ர் - யாயினும் - தெளிந்தநீர்த்தடாகத்துளிரு
க்கின்ற சிறியமீனினது முட்டையைக்காட்டி
னுஞ்சிறிதாயிருந்தாலும், அண்ணல் - நிழலாகு
ம்மே- பெருமைபொருந்தியயானையும் அழகு
பொருந்தியதேருங் குதிரையும் பதாதியுஞ்சே
ர்ந்தபெரிதாகிய சேனையோடேகூட அரசர்க்
கு இருக்கத்தக்கநிழலுண்டாயிருப்பது நிச்ச
யம், ஈகாரந்தேற்றம். (ஆதலால்) அதுபோ
ல, பெரி - மல்லர் - உருவிலே பெருமையுடை
யோரெல்லாரும் பெருமை யுடையவர்களாக
வேயிரார்கள், (என்றதினாலே) குணத்தொழி
ல் கல்விமுதலியவற்றிற்சிறியவர்களாகவு மிருப்
பார்கள், என்பது குறிப்பெச்சம், உம்மையெ
திரது தழுவிநின்றது. அவர்வடிவுநோக்கிப்பு
கழலாகாதென்பதுகருத்து. உ-ம்,

பரியதுகூர்ங்கோட்டதாயினும்யானை,
வெருஉம்புலிதாக்குறின். எ- க-

சிறி - மல்லர் - உருவிலேசிறுமையுடையோ
ரெல்லாருஞ் சிறியோர்களாகவேயிரார்கள், எ

ன்றறிருமேல்) றுணைத்தொழில் கல்வி முதலியவ
ற்றிற்பெரியவர்களாகவு மிருப்பார்களென்பது
மது. உ-ம்,

உருவுகண்டெள்ளாமைவேண்டு முருள்பெருந்தேர்க்
கச்சாணியன்னாருடைத்து. எ-கு-

பெற் - எல்லர் - ஒருவர்பெற்றபிள்ளைகளெ
ல்லாம் பகீரதன் முதலியோர்போல நல்லபிள்
ளைகளாகவேயிரார்கள், துரியோதனன்முதலி
யோர்போலக் கெட்டபிள்ளைகளாகவுமிருப்பா
ர்களென்பதுமது உம்மைகுறைந்துநின்றது.
இ-று. உ-ம்.

எழுபிறப்புந்தீயவைதீண்டாபழிபிறங்காப்,
பண்புடைமக்கட்பெறின். எ-கு-

இக்குறளினெதிர்மறைமுகத்தாற்கெட்டபிள்ளைகட்கு தா
ரணைமுங்காண்க. பெற்றோர்- கொண்டோரென்புழி, யா
னுண்டது சோறுஎன்றாற்போலச்செயப்படுபொருள் வி
னைமுதல்போனின்றன.

உற் - எல்லர் - சுற்றத்தாரெல்லாந்துரியோ
தனனுக்கு விதுரன் கர்ணன் முதலியோர்போ
ல நல்லசுற்றத்தாராகவேயிரார்கள், சல்லியன்
சகுனி முதலியோர்போலக்கெட்ட சுற்றத்தா
ராகவுமிருப்பார்கள், எனக்கொள்க. இத்தொ
டர்க்கும்உம்மைவிகாரத்தாற்றொக்குநின்றது.
உ-ம்,

விருப்பறுச்சுற்றமியையினருப்பறு
வாக்கம்பலவுந்தரும். எ-கு.

இதனெதிர்மறைமுகத்தாற்கெட்டசுற்றத்திற்கு முதாரணங்காண்க.

கொண் - மல்லர் - கொள்ளப்பட்டமனைவியரெல்லாரும் அருந்ததி முதலியோரைப்போற்கற்புடைமனைவியராகவே யிரார்கள், தீங்குடைமனைவியராகவு மிருப்பார்கள், எனக்கொள்க, உ-ம்,

தெய்வந்தொழாஅள்கொழுநற்றொழுதெழுவாள்,
பெய்யெனப்பெய்யுமழை. எ-ம்-
மனைமாட்சியில்லாள்கணில்லாயின்வாழ்க்கை,
யெனைமாட்சித்தாயி னுமில். எ-ம்-

இவற்றுவிருதிறத்தார்க்குமுதாரணங்காண்க. தேம்படுபனையினைத்தொடங்கி - பெண்டிருமல்லரென்பதனளவுமொருதொடர். இதனுள்- தேம்- நிழலாகாதே- என்பதும், தெள்- நிழலாகும்மே- என்பதும். எடுத்துக்காட்டுவமையெனக்கொண்டு, அதுபோலவென்பதுகூட்டி, பெரியோரெல்லாம்- மல்லர், சிறி -மல்லர், பெறி -மல்லர், உற்- றல்லர், கொண்-மல்லர். எனமுடித்துப்பொருள்காண்க. இத்தொடரின்கருத்து, பெருமைபெருமையேயாகாது சிறுமைசிறுமையே யாகாது பெருமையினுஞ் சிறுமையுமுண்டு சிறுமையினும்பெருமையுமுண்டென்பதாம். (௰௩)

அடினுமாவின்பாறன்சுவைகுன்றாது, சுடி
னுஞ்செம்பொன்றன்னொளிகெடாஅ, த
ரைக்கினுஞ்சந்தனந்தன்மணமறாஅது, பு
கைக்கினுங்காரகில்பொல்லாங்குகமழா, கல
க்கினுந்தண்கடல்சேறாகாதே, யடினும்பா
ல்பெய்பினுங்கைப்பறாதுபேய்ச்சுரைக்கா, பூட்

டினும்பாற்விளையுள்விகமழாதே, யொருநா
ட்பழகினும்பெரியோர்கேண்மை, யிருநில
ம்பிளக்கவேர்வீழ்க்கும்மே, நூறுண்டுபழ
கினுமூர்க்கர்கேண்மை, நீர்க்குட்பாசிபோ
ல்வேர்க்கொள்ளாதே, (ஆதலால்) பெருமை
யுஞ்சிறுமையுந்தாந்தரவருமே. *

(இ-ள்.) அடு. - அறு.து- பசுவின்பாலைவற்றக்காய்ச்சினாலுந்தன்சுவைகுறைபடாது, (அதிகப்படும்) அதுபோலவும், சுடு-கெடாது-நெருப்பிலே சுடப்பட்டாலுஞ்செம்பொன்னானது தன்னொளிகுறைவுபடாது, (அதிகப்படும்) அதுபோலவும், அரை- மறாது - சந்தனக்கட்டையைத்தேய்த்தபோதைக்கும் அதன்வாசனை தேய்ந்துகுறைவுபடாது, (அதிகப்படும்) அதுபோலவும், புகை- கமழா-சேகுபற்றிய அகிற்கட்டையை நெருப்பிற்சுட்டுப்புகைத்தபோதைக்குந்தன்வாசனைகெட்டுத்தீதாகநாறாது, (நற்கந்தமேமிகும்) அதுபோலவும், (கமழாது-என்பது-நாறுகெட்டுநின்றது) கலக் - காது - குளிர்ச்சிபொருந்தியகடலைக்கலக்கினபோதைக்கும் அதுகலங்கிச்சேறாகமாட்டாது. (பின்னையுந்தெளிந்தேயிருக்கும்) அதுபோலவும், மேன்மக்களையொருவர்பொல்லாங்குசெய்துகெடுப்

பினுந் தம்மேன்மையாகிய குணங்கெடாமலே கெடுப்பவர்க்கு இன்பமாகியவற்றையே யவர் செய்வர், எ-று. இ-று. உ-ம்,

இன்னாசெய்தார்க்குமினியவேசெய்யாக்கா,
லென்னபயத்ததோசால்பு. எ- இ.க.

இனியருந்தாபத்தியால் - நன்மைசெய்தார்க்குந்தீமைகளேசெய்வது கீழ்மக்களுக்கியல்பெனக்கொண்டு வருந்தொடர்க்கு - இக்குறளையேயுதாரணமாகக்காண்க.

அடினும் - காய் - பேய்ச்சுரைக்காயைத் தித்திப்பாகியபாலின்பால் விட்டுச்சமைத்தாலும் தன்குணமாகியகசப்பு நீங்காது, (அந்தப்பாலுங்கெட்டுப்போம்) அதுபோலவும், உளட் - பூசாது - உள்ளிப்பூண்டிற்குப் பலவாசனைகளை யூட்டினபோதைக்கும் தன்குணமாகிய துர்க்கந்த நீங்கி நற்கந்தமுண்டாகாது, (அந்தப்பல நல்லவாசனைகளையுங் கெடுத்துப்போடும்) அதுபோலவும், கீழ்மக்களைப்பல நன்மைகள்செய்துபோற்றினு மவற்றையெல்லாங்கெடுத்துத் தமது துர்க்குணங்களையே யவர்காட்டாநிற்பர். எ-று. உ-ம்,

தளிர்மேலே நிற்பினுந் தட்டாமற் செல்லா,
வுளிநீரர் மாதோ கயவ- ரளிநீரார்க்,
கென்றுஞ்செய்யாரொளித்தாலுஞ்செய்பசிவ,
பின்றாக்குசெய்வார்ப்பெறின். எ-ம்-
வேங்கைவரிப்புலியைத்தீர்த்தவிடதாரி - கலம் - எ ம்,
தக்காருந்தக்கவரல்லாருந்தந்நீர்மை,
யெக்காலுங்குன்றலிலராய- ரக்காரம்,

யாவரோ தின்னினுங்கையாதாங்கைக்குமாந்,
தேவரோதின்னினும்வேம்பு. எ-ம்-

வருமிவற்றுட் கயவர்போற்றுவோர்க்கு நற்குணங்கொடாமைக்கு நந் தீக்குணங்கொடுத்தற்குமே யுதாரணங்காண்க. இவ்விரண்டுதொடர்க்கும்பொருள், பெரியோர் - மூர்க்கர் எ-ம்- பெருமையுஞ்சிறுமையுந்தாந்தரவருமே. எனவும். பின்னர்க்கூறுதலால் - ஒட்டலங்காரமன்று எடுத்துக்காட்டுவமையென்வே கொள்க. விளங்குதற்பொருட்டு இங்கேயெடுத்துரைக்கப்பட்டன.

ஒருநாட் - கேண்மை - மேன்மக்களுடைய சிநேகமாகியவிருட்சமானது ஒருநாட்பழகின போதைக்கும், இரு- கும்மே- பெருமைபொருந்திய பூமியினுடைய திட்பமெல்லாம்பிளக்கும்படி நாளுக்குநாள்வேரூன்றி நிற்கும். எறு. வீழ்க்குமேனமகரவொற்றுவிரித்தல்விகாரமாய்நின்றது. ஏகாரத்தைமாறிக்கூட்டுக. சிநேகமென்னுந்தருவானது நாளுக்குநாட் பூமியெல்லாம்பிளக்கும்படிவேரிறக்கிக்கொண்டே தழைத்தோங்குமென்பதாம். இ - று.உ - ம்,

நிறைநீரநீரவர்கேண்மைபிறைமதிப்,
பின்னீரபேதையார்நட்பு. எ-ம்-
கருத்துணர்ந்துகற்றறிந்தார்கேண்மையெஞ்ஞான்றுங்,
குருத்திற்கரும்புதின்றற்றே - குருத்திற்,
கெதிர்செலத்தின்றன்னதகைத்தரோவென்று,
மதுரமிலாளர்தொடர்பு. எ-ம்- காண்க.

நூறு - மை - கீழ்மக்கள்சிநேகமாகிய விருட்சமானது நூறுவருடம் பழகினபோதைக்கு

ம், நீர்க்- தே- நீர்ப்பாசிநீர்க்குள்ளே வேரிறங்
காதலைவதுபோல வேறொன்றுமலையலையும்.
எ-று. பாசிநீர்க்குள் வேர்க்கொள்ளா தலைதல்
போல வேர்க்கொள்ளாதலையுமெனக்கூட்டி வி
ரித்துக்கொள்க. ஏகாரமசைநிலை. இ-று. உதா
ரணமேற்காட்டியவற்றுட்காண்க.

(அதனால்) பெருமையுஞ்சிறுமையுந் தாந்த
ரவருமே-மேன்மக்கள்பாற்பெருமை வருதலு
ங் கீழ்மக்கள்பாற்சிறுமைவருதலும் அவர்தரவ
ருவதேயன்றிப்பிறர்தரவருவதில்லை. எ-று. மே
ன்மக்களுக்கு மேலான குணமேயியற்கை கீழ்
மக்களுக்குக் கீழான குணமேயியற்கை யிதை
யொருவராலுமாற்றக்கூடாதென்பதுகருத்து.
உ-ம்,

பெருமைக்குமேனைச்சிறுமைக்குந்தத்தங்
கருமமேகட்டளைக்கல். எ-ம்-
தக்காருந் - வேம்பு. எனவுங்காண்க.

ஆயின்- மேன்மக்கள் கீழ்மக்களுக்குதாரணமிரண்டிடத்
துங்காட்டவேண்டுவதென்னெனின், அங்கேவகுத்துக்
கூறி யிங்கேதொகுத்துக்கூறியதனை யிரண்டிடத்துங்கா
ட்டவேண்டிற்றென்க. அடினுமாவின்பாறன்சுவைகுன்
றாது- என்பது- முதல், பெருமையுஞ்சிறுமையுந்தாந்தர
வருமேயென்பதனளவுமொருதொடர். இதனுள் - அடி
னுமென்பதுமுதல்- கலக்கினுந்தண்கடல்சேறுகாதென
ன்பதனளவும்- மேன்மக்களுக்கும், அடினும்பால்பெய்து
என்பதுமுதல்- உள்ளிகமழாதே என்பதனளவுங் கீழ்மக்
களுக்கெடுத்துக்காட்டுவமையெனவும்பின்பு- ஒருதச

உ- வீழ்க்கும்மே-என்பது மேன்மக்கள் நட்புக்கும், தாறு ண்டு- கொள்ளாதே - என்பதுகீழ்மக்கள் நட்புக்கும் உவ மையெனக்கொண்டு, அதனுலெனக் காரணங்காட்டிப் பெருமையுஞ்சிறுமையுந் தாந்தரவருமே-எனத்தொகுத் துமுடித்துக்கொள்க.. (௱எ)

சிறியோர்செய்தசிறுபிழையெல்லாம், பெ ரியோராயிற்பொறுப்பதுகடனே, சிறியோ ர்பெரும்பிழைசெய்தனராயிற், பெரியோ ரப்பிழைபொறுத்தலுமரிதே,(அதனுல்)கற் கைநன்றேகற்கைநன்றே, யையம்புகினுங்க ற்கைநன்றே. ※

(இ-ள்.) சிறியோர்செய்த- கீழ்மக்கள்செ ய்த, சிறுபிழையெல்லாம்- அற்பக்குற்றங்களை யெல்லாம், பெரியோராயின் - பெரியோராயி ருக்கவேண்டின், பொறுப்பதுகடனே- பொ றுத்திருத்தலே நீதியாம், எ-று. ஆயினென்ப தை, ஆயிருக்கவேண்டின் எனவிரித்துக்கொள் க. உ-ம்.

நிறையுடைமைநீங்காமைவேண்டி நிறையுடைமை,
பொறையுடைமைபோற்றியொழுகப்படும். எ - க.

சிறியோர்பெரும்பிழைசெய்தனராயின் - சி ற்றறிவுடையோர்பெரிதாகிய குற்றத்தைச்செய் வாராஞல், பெரியோரப்பிழைபொறுத்தலும ரிதே - அப்பெரியோரந்தக்குற்றத்தைப்பொ றுத்திருப்பதுமரிதாம், எ-று. அவ்வாறுபொ

றுப்பவராயினு மிதற்குக்கோபங்கொள்வர் கொண்டாற்காப்பதரிதென்பதுகருத்து. உ-ம்,

குணமென்னுங்குன்றேறிநின்றார்வெகுளி,
கணமேயுங்காத்தலரிது. எ-சு.

(அதனால்) இப்பெருமைசிறுமைகளையெல்லாமொருவனறிந்தொழுகுதற்பொருட்டு, கற்கைநன்றேகற்கைநன்றே. எல்லாநூல்களையுமிளமைமுதற்றொடங்கிக் கற்பதேநன்மை கற்பதேநன்மை, ஐயம்புகினுங்கற்கைநன்றே - பிச்சையேற்கவந்தகாலத்துங்கற்பதேநன்மை. எ-று. இதனுட்சிறியோர்செய்தசிறுபிழையெல்லாமென்பதுமுதல் - ஐயம்புகினுங்கற்கைநன்றே, என்பதளவுமொருதொடர். கடன்-அரிது, அதனால்-கற்கைநன்றெனமுடிக்க, அப்பெருமைசிறுமைகளையறிந்தொழுகுதற்கு எவ்வளவுகற்பினுமவ்வளவுக்களவு அறிவுளராக்குமாதலால் அதுபற்றி, யடுக்கியுந்தேற்றேகாரங்கொடுத்துவலியுறுத்தியும் அமையாது மீட்டும் அதுபோலத் துன்பநோயொழித்தற்கேற்றமருந்துபிறிதில்லையாதலால் ஐயம்புகினுங்கற்கைநன்றேயெனக்கூறினானெனப்பொருள் கொள்க. உ-ம்,

தொட்டனைத்தூறுமணற்கேணிமாந்தர்க்குக்
கற்றனைத்தூறுமறிவு.

எனக்கற்றவளவு அறிவுசுரத்தற்கும்,

இம்மைபயக்குமாலீயக்குறைவின்றாற்
றம்மைவிளக்குமாற்றாமுளராக்கேடின்றா
லெம்மையுலகத்தும்யாங்காணேங்கல்விபோன்
மம்மரறுக்குமருந்து.

எனத்துன்பநோயொழித்தற்கு அதைவிட மருந்தில்லை யென்றதற்குமுதாரணங்காண்க. (௰அ)

கல்லாவொருவன்குலநலம்பேசி, னெல்லி
னுட்பிறந்தபதராகும்மே, நாற்பாற்குலத்
தின்மேற்பாலொருவன், கற்றிலனாயிற்கீழி
ருப்பவனே, யெக்குடிப்பிறப்பினும் யாவ
ரேயாயினு, மக்குடிக்கற்றோரை மேல்வரு
கென்ப, ரறிவுடையொருவனையரசனும் வி
ரும்பும், (அதனால்) அச்சமுள்ளடங்கியறிவ
கத்தில்லாக், கொச்சைமக்களைப் பெறுதலி
னக்குடி, யெச்சமற்றேமாந் திருக்கை நன்
றே. *

(இ-ள்.) கல்லாவொருவன்குலநலம்பேசின் - கல்லாதவொருவனையும் அவன்குலத்திற்கற்றவருடைய மேன்மையையெடுத்துப்பேசுங்கால்; நெல்லினுட்பிறந்தபதராகும்மே - நெல்லுட்பயிருட்பிறந்தபதரும் நெல்லுமாய்முடியும், எ-று. இவனைப்பதரெனவேயக்குலத்திற்பிறந்துகற்றவர் நெல்லென்பதுதானேயமைதலால் மிகைபடக்கூறுதொழிந்தார். குலம் - ஆகுபெயர், பதர்வடிவிலே நெல்லைப்போலிரு

ந்து பயன்படாததுபோலப் பயன்படார் கல்லாதவரென்பதாங்கருத்து. உ-ம்,

உளரென்னுமாத்திரையரல்லாற்பயவாக்,
களரனையர்கல்லாதவர், எ- இ- க-

நாற்பாற்குலத்தின்மேற்பாலொருவன் - அந்தணன் அரசன் வணிகன் சூத்திரனென்னு நான்குவகைப்பட்டவருணத்தின் முன்னின்றவருணத்திற்பிறந்தவொருவன், கற்றிலனாயிற்கீழிருப்பவனே - கல்லாதவனாயிலவன் தாழ்ந்தஇடத்திலிருக்கத்தக்கவனே, எக்குடிப்பிறப்பினும் - கடைநின்றஎந்தக்குலத்திலே பிறந்திருந்தாலும், யாவரேயாயினும் (அழைப்பவர் தேவர் முனிவர் அரசர் என்பவருள்) யாரானபோதிலும், அக்குடிக்கற்றோரைமேல்வருகென்பர் - அக்குலத்திற் கற்றவராயினோரை மேலிடத்துவந்திருக்கவென்றுபசரித்தழைப்பர், எ-று. யாவரேயாயினுமென்றது அழைப்பவரைக்குறித்து நின்றது. யாவரேயாயினுமென்றதனாற்பெருமைபொருந்திய தேவர்முதலியோருளரென்பதூஉம்பெற்றாம். வருகவென்பாரென்பது வருகென்பரெனவிகாரமாயிற்று. கருத்துவிளங்கிற்று. உ-ம்,

மேற்பிறந்தாராயினுங்கல்லாதார்கீழ்ப்பிறந்துங்,
கற்றாரனைத்திலர்பாடு, எ-ம்-
உடையார்முனில்லார்போலேக்கற்றுங்கற்றார்,
கடையரேகல்லாதவர், எனவுங்காண்க.

அறிவுடைபொருவனையரசனும்விரும்பும் - இச்சுநகல்லி யறிவுடையோனைசசிறந்த அரச னுங்கூடவிரும்புவான், எ-று. அரசனுமென்ற சிறப்பும்மையிறந்தது தழுவியுநின்றது. பெற் றவர் கற்றவர் யாவருமற்றக்குடிகளும் விரும்பு வதன்றியெனப்பொருள்தருதலால் எனக்கா ண்க. இ-று. உ-ம்,

தம்மிற்றம்மக்களறிவுடைமைமாநிலத்து,
மன்னுயிர்க்கெல்லாமினிது, எ-க-

அதனல் - கற்றதனாலிப்படிமேன்மையுங் க ல்லாததினு லிப்படிக்கீழ்மையும்பெற வருதலா ல், அச்சமுமர்ளடங்கி- பயமொன்றேயதனுள்நி றைந்து, அறிவகத்தில்லா- மனத்தின்கண் அறி வொதுங்கிய, கொச்சைமக்களை-ஆடுகளையொ த்தபிள்ளைகளை, பெறுதலின்- பெற்றுவருந்து தலினும், அக்குடி- (அந்தப்பிள்ளைகளைப்பெ ற்ற) அக்குலத்துள்ளவர், எச்சமற்று- சந்ததிய ற்று, (வந்திகளாய்) ஏமாந்திருக்கைநன்றே- இ ன்புற்றிருத்தலேநன்று,எ-று. அப்பிள்ளைகளை ப்பெற்றுத்தாமுமவருந்துன்புறுத லொழித லால், எச்சமற்றேமாந்திருத்தல்நன்றென்றார். கொச்சை- வெள்ளாடு, கல்லாவொருவன்குலநல ம்பேசினெனன்பதுமுதல் - எச்சமற்றேமாந் திருக்கைநன்றே என்பதளவுமொருதொடர்

னைக்கொண்டு - கற்றதனாலிப்படிப்பெருமை
யுங் கல்லாததினாற்சிறுமையும்வரும் - அதனால்-
கல்வியறிவில்லாப் பிள்ளைகளைப் பெற்றவருந்
தவிறும் பெறுமின்புற்றிருத்தலே நன்றெனப்
பொருள்காண்க. (௰௧)

யானைக்கில்லை தானமுந் தருமமும், பூனைக்கி
ல்லை தவமுந் தயையும், ஞானிக்கில்லை யின்ப
முந் துன்பமும். *

(இ-ள்.) தானமுந்தருமமும் - (கைகொ
டைக்கு நீண்டதுபோலிருப்பினும்) கொடை
யும் மற்றத்தருமங்களைச்செய்தலும், யானைக்கி
ல்லை - யானைக்கியல்பாகவேயில்லை, அதுபோல
வும், தவமுந்தயையும் - (தவஞ்செய்வதுபோல
க்கண்களை மூடிக்கொண்டும் அருளுடையது
போலமிகவுஞ்சாந்தகுணத்தோடு கூடியுமிருந்
தாலும்) அவ்விரண்டும், பூனைக்கில்லை - பூனைக்கி
யல்பாகவேயில்லை, அதுபோலவும், இன்பமுந்
துன்பமும் - (உலகத்தாரோடுகூடியின்புற்றிரு
ப்பவன்போலவுந் துன்புற்றிருப்பவன்போல
வுந்தோன்றினும்) அவ்விரண்டும், ஞானிக்கில்
லை - ஞானிக்கவையியற்கையிலில்லை, எ-று. இத
ன்கருத்து விளங்கிற்று. உ-ம்,

இருள்சேரிருவினையுஞ்சேரா விறைவன்,
பொருள்சேர்புகழ்புரிந்தார்மாட்டு. எ-க-

இருவினையின்பயனின்பதுன்பங்களாதலாற்காண்க. (௨௰)

சிதலைக்கில்லைசெல்வமுஞ்செருக்கும், முதலை
க்கில்லைநீத்துநிலையும், அச்சமுநாணுமறிவி
லோர்க்கில்லை, நாளுங்கிழமையுநலிந்தோர்க்
கில்லை, கேளுங்கிளையுங்கெட்டோர்க்கில்லை.*

(இ-ள்.) செல்வமும்- இது செல்வமென்பதும், (இது பிறர்க்குப்பயன்படுசெல்வமுடையவராடையென்றெண்ணுமெண்ணமும்) செருக்கும்- இது செருக்கென்பதும், (இதுபிறர்க்குதவாது தாமேயுண்டுடுத்துக்களித்திருப்பவராடையென்றெண்ணுமெண்ணமும்) சிதலைக்கில்லை- செல்லுக்குஇயல்பாகவேயில்லை, (நேர்ந்தாலிரண்டையுந்தின்றேவிடுவதன்றித் தின்று இருப்பதில்லை)(அதுபோலவும்) நீத்தும் - இது நீந்தத்தக்கதென்பதும், (இது நீந்தத்தக்க நீரிலேசெல்லலாகாதென்றெண்ணு மெண்ணமும்) நிலையும் - இது நிலைக்கொளத்தக்கதென்பதும், (இது நிலைக்கொளத்தக்க நீரிலே செல்லலாமென்றெண்ணுமெண்ணமும்) முதலைக்கில்லை- முதலைக்கியல்பாகவேயில்லை, (நேர்ந்தாலிரண்டிலுஞ்செல்வதேயன்றிச் செல்லாதிருப்பதில்லை) (அதுபோலவும்) அச்சமுநாணும் - இது அஞ்சத்தக்கது இது நாணத்தக்கது என்பதும், தக்கதிதுவென்றொதுங்குதலுந்தகாதநி

றுவென்றதைச்செய்யவுடன்படுதலும், அறிவி
லார்க்கும்- பேதையர்க்கும், நாளுங்கிழமை
யும்- இந்தநாள் இந்தக்கிழமைதக்கதென்று ஒ
ன்றைச்செய்யச்சார்தலுந் தகாதென்று விலக
லும், நலிந்தோர்க்கு - வறுமையால்நொந்தவ
ர்க்கும், கேளுங்கிளையும்- இவர்சிநேகஞ்செய்
யத்தக்கவொன்பதும் இவர்விரும்பத்தக்க சுற்
றத்தாரொன்பதும், (தக்கவொன்றுதழுவலுந்த
காதவொன்றுவிலகலும், கெட்டோர்க்கு - தங்
குலநிலைமையிலே தவறிக்கெட்டுப்போனவர்க்
கும், இல்லை- (நேர்ந்தாலிரண்டுமொன்றுவதே
யன்றி) இயல்பாகவேயில்லை, எ-று. வறுமையி
லென்பது- சொல்லெச்சம், நலிந்தோரொன்ப
து- செயப்பாட்டுவினையாலணைந்தபெயர். செ
ல்வம்- செருக்கு- என்பன ஆகுபெயர். தின்ப
தன்றியெண்ணுவதென்பது குறிப்பெச்சம். வி
னையவற்றையுமேற்குமாறு அறிந்துகொள்க. இ
வற்றிற்குதாரணம்.

அஞ்சுவதஞ்சாமைபேதைமையஞ்சுவ,
தஞ்சலறிவார்தொழில். எ-ம்.
நாணகத்தில்லாரியக்கமரப்பாவை,
நாணாலுயிர்மருட்டியற்று. எ-ம்-
தொல்வரவுந்தோலுங்கெடுக்குந்தொகையாக,
நல்குரவென்னுநசை. எ-ம்-

(இக்குறளினுள் - தொல்வரவென்பது நாளுங்கிழமையும்

பார்ப்பனமுதலியவாதலா லுதாரணங்காண்க.)

நீரினு நுண்ணிது நெய்யென்பர் நெய்யினும்,
யாருமறிவர்புகை நுட்பந், தேரின் -
னிரப்பிடுபையாளன்புருமேபுகையும்,
புகற்கரியபூழைநுழைந்து. எ-ம்-

(இதில்- புகையுநுழைதற்கரிய துவாரத்திலே நுழைந்து போவான்- என்றதனால், செல்வனைத்தடுத்த நாட்கிழமைகளிலு நுழைந்துபோவானெனவுதாரணங்காண்க.)

தலையினிழிந்தமயிரனையர்மாந்தர்,
நிலையினிழிந்தக்கடை. எ-ம்.

கெட்டார்க்குநட்டாரில்லென்பதோநெந்சேநீ,
பெட்டாங்கவர்பின்செலல். எ-ம்-

முறையேகாண்க- சிதலைக்கென்பதுமுதல் - கேளுங்கிளையுமென்பதனளவுமொருதொடரெனக்கொண்டு அதனுள்- சிதலைக்கில்லை முதலைக்கில்லையென்பனவிரண்டுமெடுத்துக்காட்டுவமையெனவும், அச்ச- லை, நாளு - லை, கே - லை, என்பன மூன்றும்பொருளெனவுங்கொண்டு அவற்றிற்கியையும்படி பொருள்விரித்துரைத்து முடித்துக்கொள்க. செய்யுளின்படி நோக்கித்தனித்தனி முடிபாக்கிக்கூறினுமோனும்- சிதலைக்குச்செல்வமுஞ்செருக்கும், முதலைக்குநீத்துநிலையுமில்லையதுபோல, அறிவிலோர்க்கச்சமுநாளுமும்- நலிந்தோர்க்கு நாளுங்கிழமையும் - கெட்டோர்க்குக்கேளுங்கிளையுமில்லையென ஒருவினைமுடிபாக்குக. (உக)

உடைமையும்வறுமையுமொருவழிநில்லா
து, குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர்,
நடைமெலிந்தோரூர் நண்ணினு நண்ணுவர்,
சிறப்புஞ்செல்வமும் பெருமை யுமுடை
யோர், அறக்கூழ்ச்சாலையடைகினுமடைகுவ,
ரறத்திடுபிச்சைகூவியிரப்போ, ரரசோடிரு

ந்தூலகாளினுமாமாறுவர், குன்றத்தனையிருநி
யைப்படைத்தோரன்றைப்பகலேயழிகினு
மழிகுவ, ரொருநிலைபாடங்கால்சாய்ந்தாக்கு
க், கழுதைமேய்பாழாகினுமாகு, மனைவனி
யணிந்தமகளிராங்கே, பிணவணியணிந்து
தங்கணவரைத்தழீஇ, யுடுத்தவாடை கோடி
யாக, முடித்தகூந்தல்விரிப்பினும்விரிப்பர்,
பெற்றமுங்கழுதையுமேய்ந்தவப்பாழ், பொ
ற்றொடிமகளிருமைந்தருஞ்செறிந்து, நெற்
பொலிநெடுநகராயினுமாகும், (அதனால்)
இல்லோரிரப்பதுமியல்பேயியல்பே, யிரந்
தோர்க்கீவதுமுடையோர்கடனே. ※

(இ-ள்.) உடை - நில்லாது - செல்வமுந் தரித்திரமுமாகியவிரண்டும் அது நின்றவிடத் ததுவேயாகவு மிது நின்றவிடத்திதுவேயாகவு நில்லாது மாறியுநிற்கும், எ-று. மாறியுநிற்கு மென்பது குறிப்பெச்சம். இதன் றுவாக்கியி னிவருவனவற்றோடொட்டுக. இதற்கு-உ-ம்,

கூத்தாட்டவைக்குழாத்தற்றே பெருஞ்செல்வம்,
போக்குமதுவிளிந்தற்று. எ-ம்-
துகடீர்பெருஞ்செல்வந்தோன்றியக்காற்றொட்டுப்,
பகடுநடந்தகூழ்பல்லாரோடுண்க.
வகடுறயார்மாட்டுநில்லாது செல்வஞ்,
சகடக்கால்போலவரும். எ-ம்- காண்க.

குடை - நண்ணுவர் - வெண்கொற்றக்குடை

நிழலிடும்படியானையின்கழுத்திலிருந்து அதை
ச்செலுத்திப்பவரிவந்த வரசரும் எல்லாவற்
றையுமிழந்து நடப்பதற்குச்சத்தியில்லாமல்-
தேகமுமெலிந்துமற்றொருதேசத்திலே சீவன
நிமித்தமாகப்போய்ச்சேரினுஞ் சேருவர்,
எ-று. சிறப்பும்மைவிகாரத்தாற்றொக்குநின்ற
து. உ-ம்- மேற்காட்டியகுறளும்,

ஆனையெருத்தம்பொலியக்குடைநிழற்கீழ்ச்-
சேனைத்தலைவராய்ச்சென்றோரு- மேனை,
வினையுலப்பவேறாகிவீழ்வர்தாங்கொண்ட-
மனையாளைமாற்றார்கொள. என்பதுங்காண்க.

சிறப் - மடைகுவர் - விசேடித்தவுயர்வுஞ்
செருக்கியசெல்வமும் மானமுமுடையவர்- அ
வையெலாமிழந்து நித்தத்தரித்திரராகி வயிற்
றுப்பசியினாலே கூழின்பொருட்டு அவற்றை
யிழந்தவூரிலேயிருக்கின்ற) அன்ன சத்திரங்க
ளைப்போய்ச்சேரினுஞ்சேர்வர், எ-று. உ-ம்,

நல்குரவென்னுமிடும்பையுட்பல்குரைத்
துன்பங்கள்சென்றுபடும். எ-ம்-
அறுசுவையுண்டியமர்ந்தில்லாளூட்ட-
மறுசிகைநீக்கியுண்டாரும்- வறிஞராய்ச்,
சென்றிரப்பரோரிடத்திற்கூழெனிற்செல்வமொன்-
றுண்டாகவைக்கற்பாற்றன்று. எ-ம்- காண்க.

அறத் - மாணுவர் - தருமத்தைக்குறித்திட்
ப்ப பிம்பிச்சையுண்டோவென்று வீதிகளிலே நி
ன்றுகூப்பிட்டிரந்துதிரிபவர் அரசியலோடுகூ

டியிருந்து உலகத்தையாளினுமாளுவார், எ-று அரசியலோடுகூடியிருத்தல்-படை-குடி-கூழ்-அமைச்சு- நட்பு-அரண்-என்னுமாறங்கத்தோடுங்கூடியிருத்தல். உ-ம்,

நல்லவையெல்லாஅந்தீயவாந்தீயவு,
நல்லவாஞ்செல்வஞ்செயற்கு. எ-ம்-

வளம்பட- இல்- எ-ம்- காண்க.

குன்றத் - மழிகுவர் - மலையளவாகவுயர்ந்த சங்கநிதி பதுமநிதிகளைப்படைத்தவர் அப்படைத்தவன்றைத்தினத்திலேதானே யவற்றையழுபவியாமலிறப்பினுமிறப்பர், எ-று. உ-ம்.

நெருநலுளனொருவனின்றில்லையென்னும்,
பெருமையுடைத்திவ்வுலகு. எ-ம்-
மலைமிசைத்தோன்றுமதியம்போல்யானைத்,
தலைமிசைக்கொண்டகுடையார், நிலமிசைத்-
துஞ்சினரென்றெடுத்தூற்றப்பட்டாரல்லா,
லெஞ்சினாரிவ்வுலகத்தில். எ-ம்- காண்க.

எழுநி- லாகினுமாகும்- செல்வருடையவெழுநிலைகளையுடையமாடங்களானவைபடியோடே சாய்ந்து நொறுங்கிப்போகக்கழுதைகளுமேயப்படும்பாழ்நிலங்களாயினுமாகும். எ-று, உக் என்பது - உக்குளனத்திரிந்துநின்றது. இறந்ததுதழுவிய- எச்சவும்மைகுறைந்துநின்றது அதனால், ஆடுமாடுகள்மேய்வதுமன்றி எனப்பொருள்படுதல்காண்க. உ-ம்,

மேற்கரட்டியகுனினும்,

கடகஞ்செறிந்தநங்கைகளால்வாங்கி-
யிடகுபறித்துக்கொண்டட்டுக்- குடைகலனை,
வுட்பிவிவெந்தைதின்றுள்ளற்றுவாழ்பவே-
னுப்புரவுசென்றுலர்ந்தக்கால். என்றவிதனுள்ளும்.

எழுநிலைமாடங்கால்சாய்ந்துக்குக்கழுதைமே ய்பாழாக இவரிவ்வாறுயினுமெனக்காண்க- அ தற்குக் கடகஞ்செறிந்தகையே சான்றாதலால். மணவணி-த்தழீஇ- மணக்கோலத்தோடு மண வேதிகையில்வீற்றிருந்தமாதர்கள். அந்தமண ப்பந்தலிலேதானே (கணவிறந்ததினால்) பிணை த்துக்கேற்றகோலத்தைப்பூண்டுமாலையிட்ட த ங்கணவனையணைத்துக்கட்டிக்கொண்டு, உடுத்- விரிப்பர் - முன்னுடுத்தமணக்கூறையேயறாப் புக்கூறையாகவுமுன்புமகிழ்ந்து முடித்தகூந்த லைவிரித்துப்புலம்பினும்புலம்புவர், எ-று. விரி த்தல்புலம்புதற்காதலால் வருவித்துரைக்கப்ப ட்டது. உ-ம்,

ஒருபொழுதும்வாழ்வதுணரார்கருதுப,
கோடியுமல்லபல- எம்.

இக்குறளினுள்- அன்றைத்தினம் வருவதுணராது கலியா ணஞ்செய்யநினைந்து செய்தலாலுதாரணங்காண்க.

மன்றங்கறங்குமணப்பறையாயின-
வன்றவர்க்காங்கேபிணப்பறையாய்ப் - பின்றை,
யொலித்தலுமுண்டாமென்றுய்ந்துபோமாறே-
வலிக்குமாமாண்டார்மனம். எ-ம்- காண்க.

பெற்ற- செறிந்து - மாடுகளுங்கழுதைகளு

மேய்ந்த மேற்கூறிய பாழ்நிலம்போன்றதும் பொன்னாற்செய்தவணிகளையணிந்தமங்கையரும்புருடருமாகநெருங்கி, நெற் - மாகும் - நெல்லின்பொலிகளையுடையபெரும்பதியாயினுமாகும், எ-று. பொலி - அம்பாரம் - செறியஎன்பதுசெறிந்தெனத்திரிந்துநின்றது. காடுநாடாயினுமாம் - என்பதுகருத்து. உதாரணம்வந்தவழிக்காண்க.

(அதனால்) அக்காரணத்தால், இல்லோ - பேதரித்திரர்யாசகஞ்செய்வதுமவர்க்கியற்கையேயாம், எ-று. வலியுறுத்தற்பொருட்டுக்கித்தேத்தேகாரமுங்கொடுத்து இயல்பேயியல்பேயெனக்கூறினார். இசையாவொருபொருளில்லென்றல்யார்க்கும் வசையன்று வையத்தியற்கை. என்றாற்போல இங்கேசெயற்கையை யியற்கையெனப்பட்டது. இயல்பு - இயற்கை. உ-ம்,

இரக்கவிரத்தக்கார்க்காணிற்கரப்பி
னவர்பழிதம்பழியன்று. எ-ம்-
ஈவார்கணென்னுண்டாந்தோற்றமிரந்துகோள்
மேவாரிலாஅக்கடை. எ- வு- க-

இரந்தோர்க்கீவதுமுடையோர்கடனே - அவ்வாறுயாசகஞ்செய்தவர்க்கு இல்லையென்றுமற்கொடுப்பதுஞ்செல்வமுடையோர்க்குக்கடமையேயாம்- எ-று. உ-ம்,

மருந்தாகித்தப்பாமரத்தற்றாற்செல்வம்
பெருந்தகையான்கட்படின்.

எனக்காண்க. உடைமையும்வறுமையு மொருவழிநில்லா தென்பதுமுதல் இரந்தோர்க்கீவதுமுடையோர்கடனே. என்பதனையு மொழா தொடர். இதனால் உடைமையும் வறுமையுமொருவழிநில்லாதாதலால், முடை – நண்ணினும் நண்ணுவர், அடையினு மடைகுவர், ஆளினுமாளுவர், அழியினுமழிகுவர், ஆகினுமாகுப, விரிப்பினும்விரிப்பர், ஆயினுமாகும், (அதனால்) இப்பதியல்பு, ஈவதுகடன், என முடித்துப்பொருள்காண்க. உம்மைகளெழுமையத்தின்கண் வந்தன. பிறவிலக்கணங்களுமுய்த்துணர்ந்துகொள்க. (௨௨)

நல்லுலகமும்வானமும்பெறினு மெல்லா
மில்லையில்லிலோர்க்கே. *

(இ-ள்.) நல்ல – பெறினும் – நல்லபூமியின்செல்வமுழுமையும் வானுலகின்செல்வமுழுமையும்பெற்றாராயினும், எல்லா – லோர்க்கே – நற்குண நற்செய்கைகளையுடைய மனைவியைப்பெற்றிலாதவர்க்கு அவைமுழுமையுமில்லை, எ-று. பயன்படாமையினில்லையென்றார். நற்குண நற்செய்கைகளையுடையவளேயில்லாளாதலால், இல்லென அடைகொடாதுகூறினார், இல்லாளது திருக்கவில்லாததொன்றில்லை, எனவிவ்வாறேயடைகோடாம். – லெளவைகூறுதலுங்காண்க. இதன்கருத்துவிளங்கிற்று. உ-ம்,

மனைமாட்சியில்லாள்கணில்லாயின்வாழ்க்கை,
யெனைமாட்சித்தாயினுமில், எ-இ-கு. (௨௩)

தறுகண்யானை தான்பெரிதாயினுமஞ், சிறு
கண்மூங்கிற்கோற்கஞ்சும்மே. *

(இ-ள்.) தறுகண் - கோலைசெய்தற்கஞ்சா
தவீரத்தன்மைபெரிதாயினும், தான்பெரிதா
யினும் - அதுவும்உருவத்தாற்பெரிதாயிருப்பி
னும், சிறுகண்மூங்கிற்கோற்கு - (ஒருவன்பா
குகாவலுக்குட்பட்டபோது அவன்கையிலிரு
ந்த) கணுக்களையுடைய சிறியமூங்கிற்கோலுக்
கும், அஞ்சும்மே - யானையஞ்சுவது நிச்சயம்,
எ-று. சிறுகண்என்னு மிரண்டுவிசேசணமும்
கோல்என்னுமுதற்பொருட்குவந்தது, ஏகார
ந்தேற்றம் - தறுகண்பெரிதாயினுந்தான்பெரி
தாயினும் சிறுகண்மூங்கிற்கோற்கு யானையஞ்
சும்மேயெனக்கூட்டுக. கோற்கஞ்சுமென்றதனு
லி, ஒருவன்பாகுகாவலுக்குட்பட்டபோதவன்
கையிலிருந்தஎன்பதுபெற்றும். ஒருவனெ சுத்த
வீரனாயிருந்தாலுமரசனுடையபாகுகாவலுக்
குட்பட்டபோது அவனுக்கு அஞ்சிநடப்பது
மல்லாமல் அவனடையாளம்பெற்றுவந்தவர்க்
குமஞ்சிநடக்கவேண்டுமெனப்பிறிதுபொருள்
தருதலாலிது ஒட்டலங்காரமெனக்காண்க. நட
வாக்காலவன் பாதுகாப்பையிழந்து துன்புறு
தல்நிச்சயமாதலாற்கருத்துவிளங்கிற்று. உ-ம்,

இளையரின முறையொன்றாது நின்ற,
வெளியோடொழுகப்படும்.

இதனுள் - இளையரின முறையொன்றாதொழுகப்படுதலெனக்கொண்டரசனுக்கஞ்சி நடத்தற்கும் நின்றவெளியோடொழுகப்படுதலெனக்கொண்டவனடையாளத்திற்கஞ்சி நடத்தற்குமுதாரணங்காண்க. (௨௪)

குன்றுடைநெடுங்காட்டூடேவாழினும், புன்
றலைப்புல்வாய்ப்புலிக்கஞ்சும்மே, யாரையாம்
பள்ளத்தூடேவாழினுந், தேரைபாம்பிற்கு
மிகவஞ்சும்மே, கொடுங்கோன்மன்னர்வாழு
நாட்டிற், கடும்புலிவாழுங்காடுநன்றே. *

(இ-ள்.) குன்றுடை - வாழினும்- மலைகளோடடர்ந்து நீண்டகாட்டிலே யதுவுமிதுவுமொத்துவாழ்ந்தபோதினும், புன் - சும்மே - சிறியதலையையுடையபுல்வாயானது (வாய்வலியையும் வன்றலையையுமுடைய) புலிக்கஞ்சியே வாழாநிற்கும், (புல்வாய் - அன்மொழித்தொகை, புன்மையாகியவாயினையுடையது. புன்றலைப்புல்வாயென்றதனாற்புலிவன்றலைவல் வாயினையுடையதென்பதுபெற்றாம்.) ஆரை - வாழினும்- ஆரையோடுகூடிய நீரோடையில் அதுவுமிதுவுமொத்துவாழ்ந்தபோதினும், தேரை - சும்மே- தவளையானது நீர்ப்பாம்பினுக்கு மிகவுமஞ்சியேவாழாநிற்கும், (ஆரை - நீரிற்படர்வதோர்பூண்டு, ஆம்- நீர்,) இவையஞ்சிவாழ்வது

ற்கேதுவென்னெனின், சிறியதவறுளவாயிற் கொன்றுவிடுவனென்பது கருத்து - ஆதலால், கொடுங் - நன்றே - கொடுங்கோன்மன்னரோ டொத்துவாழ்கின்றநாட்டினும் (ஒருவனுக்கு) கடுமையையுடைய புலிவாழ்கின்றகாடு குடியிருத்தற்கு மிகவுநன்றாம், எ-று. அதனெல்கூடிவாழாமலதற்கஞ்சியே யனுசஞ்சரியாதவிடத்திற் குடியிருக்கலாமாதலால், நன்றென்றார். கொடுங்கோல்- வளைந்தகோல், இது - அரசநீதிகோணுதற்கு உவமையாகுபெயராய்நின்றது. கொலைசெய்யும்புலியினுங் கொடுங்கோன்மன்னர் கொடியரென்பதாம். உ-ம்,

கொலைமேற்கொண்டாரிற் கொடிதே,
யலைமேற்கொண்டல்லவைசெய்தொழுகும்வேந்து,

என்பதுகாண்க. இதனுள் புல்வாயும் புலியுந் தேரையும் பாம்பு மொத்துவாழ்தல்போல - ஒருவன் கொடுங்கோன்மன்னரோடொத்துவாழ்தலெனவும், வாழினும் புல்வாயும் தேரையும் புலிக்கும்பாம்பிற்குமஞ்சியே வாழ்தல்போல அவன் கொடுங்கோன்மன்னர்க்கஞ்சியேவாழவேண்டும் (ஆதலால்) அதைவிடவவனுக்குக்கடும்புலிவாழுங்காடே நன்றெனமுடித்துப்பொருளுணர்ந்து கொள்க. (௨௫)

சான்றோரில்லாத்தொல்பதியிருத்தலிற், றேன்றேர்குரவர்தேயநன்றே. *

(இ-ள்.) சான்- லின்- கல்வியறிவொழுக்கங்களிற்சிறந்தபெரியோர்களில்லாத புராதன

நகரியொருவன்குடியிருப்பதினும், தேன்-நன்றே. உணவின்பொருட்டாகத்தேனையாராய்ந்துதிரிகின்றகுறவர்குடியிருக்குநாடே யவன்குடியிருத்தற்குநன்று. எ-று. ஏகாரந்தேற்றப்பொருள்படநின்றது, அக்குறவர்நாட்டினு மிகு பாவமிகுதியாற்கேடுபூண்டிருப்பதாதலாற் சான்றோரில்லாதநாடு நாடன்றென்பதும் அச்சான்றோர் சார்புபெற்றவன் பகைவராலுந்தீங்குசெய்யப்படானென்பதுங்கருதி யிவ்வாறுகூறினானெனக்காண்க. உ-ம்,

தள்ளாவிளையுளுந்தக்காருந்தாழ்விலாச்,
செல்வருஞ்சேர்வதுநாடு. எ-ம்.

தக்காரினத்தனாய்த்தானொழுகவல்லானைச்,
செற்றார்செயக்கிடந்ததில். எ-ம்.

முறையேகாண்க. (௨௬)

வித்துமேருமுளவாயிருப்ப, வெய்த்தங்கிருக்குமேழையும்பதரே. *

(இ-ள்.) வித் - ய - விதைத்தற்குவித்தும் உழுதற்கு ஏர்முதலியவுமமைந்திருக்க, எய்த்தோர் - (உழுதுபயிர்செய்துவாழமாட்டாமற் சோம்பலாலே) வறுமையுற்றிளைத்திருக்கும் பேதையுமொருமக்கட்பதர், எ-று. தன்சரீரத்தை யொளிக்காமலேவருத்தப்பட்டு அக்கைத்தொழிலைச் செய்வானாயிற்குணுமிரவாதுபிறர்

க்கீந்தும்வாழ்தலாயிருக்க அதனைச்செய்யாம லே சோம்புற்று வருந்துவோனைக்கண்டாற்பூ மிதேவியு நகைசெய்வாளாதலிற்பதரென்றார். உ - ம்,

இரவாரிரந்தார்க்கொன்றீவார்கரவாது,
கைசெய்தூண்மாலையவர். எ-ம்-
இலமென்றசைஇயிருப்பாரைக்காணி,
னிலமென்னு நல்லாணகும். எ-ம்-

அவ்விருதிறத்திற்குமுதாரணங்காண்க. (உஎ)

காலையுமாலையு நான்மறையோதா, வந்தண
னென்போரனைவரும்பதரே. *

(இ-ள்.) காலை - யோதா - காலைப்போழ் திலுமாலைப்போழ்திலும் வேதம் ஓதலைச்செய் யாத, அந்த - பதரே - பார்ப்பானென்பவரனை வரும்பார்ப்பனப்பதராம், எ-று. நான்மறை யோதியதன்கணத்தை யுட்கொளாமையிற்பத ரென்றார். உ-ம்,

மறப்பினுமோத்துக்கொளலாகும்பார்ப்பான்,
பிறப்பொழுக்கங்குன்றக்கெடும்.

எனத்திருவள்ளுவனாரு மறக்கலாமென்னுங்கருத்தையுட் கொண்டு ஓதிக்கொளலாகுமெனக்கூறினர் கொள்ளாவி டிற்பிறப்புக்கெடுமென்பதே யவர்க்குங்கருத்து- அதலா லிவர்பதரென்றார். (உஅ)

குடியலைத்திரந்துகோலொடுநின்ற, முடியு
டையிறைவனுமூர்க்கனும்பதரே. *

(இ-ள்.) குடியலைத்து- குடிகளைவருத்தி

ப்பநிற்றி, இரந்து- (தன்பகுதியின்மேற்படப் பொருள்கொடுக்கும்படி யவர்களையடித்துப் பறிப்பவன்போல) யாசகஞ்செய்து, கோலொ டுநின்ற- கொடுங்கோலொடுகூடிநின்ற, முடியு டையிறைவனுமர்க்கனும்- முடிதரித்தவேந்த னாகியமர்க்கனும், பதரே - அரசப்பதராம், எ-று. விரைந்துகெடுதலுணராது நெடுங்கால மவ்வாழலாமென்றெண்ணி யவ்வாறு செய்தலா ற்பதரென்றார். உ-ம்,

வேலொடுநின்றானிடுவென்றதுபோலுங்,
கோலொடுநின்றானிரவு. எ-ம்-
வெருவந்தசெய்தொழுகும்வெங்கோலனாயி,
னொருவந்தமொல்லைகெடும். எ-ம்-

முறையேனுடியலைத்திரத்தற்கும், அவன்விரைந்துகெடு வானென்பதற்குமுதாரணமுறையேகாண்க. (உ௯)

முதலுளவாகக்கொண்டு வாணிபஞ்செய்,
ததன்பயனுகராவணிகராய்ப்பதரே. *

(இ-ள்.) முதலுளவாக - முதலாகப்பொ ருளிருக்கவும், கொண்டுவாணிபஞ்செய்ததன் பயனுகராவணிகர் - அதினாலேயொன்றும்பண் டங்களைக்கொண்டுவிற்றுவர்த்தகஞ்செய்து அ தினாலே வரப்பட்ட ஆதாயப்பலனையநுபவியா ததனவைசியர், ஆய்ப்பதர் - வைசியருக்குள்ளே தெரிந்தெடுக்கப்படும்பதர்களாம், எ-று.

முதலிலார்க்கூதியமில்லைமதலையாஞ்,
சார்பிலார்க்கில்லைநிலை.

என்றாகலின் இவர்முதலிருந்து ஊதியத்தையிழத்தலிற் பதரென்றார். (௩௰)

தன்மனையாளைத்தாய்மனைக்கனுப்பிப், பின்
பவட்பேணாப்பேதையும்பதரே. *

(இ-ள்.) தன்மனையாட்டியைப் பவளைப்பெற்ற தாய்வீட்டிற்கனுப்பிவிட்டுப் பின்பவளைப் பாதுகாவாமலேயிருக்கின்ற அறிவிலானுங் குடிசெய்வோருட் பதராம், எ-று. இல்லாளிடத்தன்புடையனாகக்கூடியறஞ்செய்து இல்வாழ்வானாயின் அவ்வன்புடைமைவடிவாகவும் அறம்பயனாகவும் இல்வாழ்க்கை முற்றுப்பெற்று அது அவனைத்தேவருளொருவனாக்கற்பாலதாயிருக்க முதலேயில்லானை நீக்கி யில்வாழ்க்கை யுருவைக்குலைத்தலிற்பதரென்றார். உ-ம்,

அன்புமறனுமுடைத்தாயினில்வாழ்க்கை,
பண்பும்பயனுமது. எ-ம்.

வையத்துள்வாழ்வாங்குவாழ்பவன்வானுறையுந்,
தெய்வத்துள்வைக்கப்படும்.

எனவும். அன்பு அறன் இல்வாழ்க்கைக்குப்பண்பு பயனைத் தருதல், அதன்பயன் அவனைத்தேவருளொருவனாக்கற்கு முதாரணமுறையேகாண்க. இன்னும்.

மாண்டகுணந்தொடுமக்கட்பேறில்லெனினும்,
பூண்டான்கழித்தற்கருமை,

என அவளிடத்து நற்குண நற்செய்கைகளும் நன்மக்க

டேபேறுமில்லாவிடினும் கொண்டவன் புறக்கழித்துவாழு வாகாதெனப்பிறர்கூறுதலுங்காண்க. (௬௧)

தன்மனையாட்டியைத்தனியேயிருத்திப், பிறன்மனைக்கேகும்பேதையும்பதரோ. *

(இ-ள்.) தன்மனைவியைத்தனியேவைத்து- அந்நியன்மனைவியைவிரும்பி யவன்மனைக்குச்செல்கின்றவுடனும் பேதையருட்பதர், எ-று. பகை பாவ மச்சம் பழிகளுளாகப்பட்டுத் தான்கெடுவதுமன்றித்தன்மனைவியுந் தன்புறத்தழிதற்கேதுவாதலாற்பதரென்றார்- பகைமுதலியவற்றாற்கெடுதற்கு- உ-ம்,

பகைபாவமச்சம்பழியென நான்கு,
மிகவாவாமில்லிறப்பான்கண். எ-ம்.

அறன்கடைநின்றாருளெல்லாம்பிறன்கடை,
நின்றாரிற்பேதையாரில்.

எனப்பேதையருட்பதரென்பதற்குமுதாரணங்காண்க.

தன்னாயுதமுந்தன்கையிற்பொருளும், பிறன்கையிற்கொடுக்கும்பேதையும்பதரே. *

(இ-ள்.) தன்னுடையஆயுதத்தையுந்தன்கையிலிருந்ததிரவியத்தையும்ஒருசார்புமில்லாத அந்நியன்கையிலேகொடுத்தவுடனும் ஏமாறுவோருட்பதராம், எ-று. யாம்பண்டுவிளையாடுஞ்சோலையென்றாற்போலக் கொடுக்கும் பேதைஎன இறந்தகாலம் எதிர்காலமாகமயங்கிநின்றது. இனியிதற்குத்தன்னாயுதத்தையாயினு

ர் தன்னைப் பொருளையாயினும் பிறன்கையிற்
கொடுக்கும்பேதையும்பதரெனினும் அமையு
ம். (பொருளைப்பிறன்கைக்கொடுத்து அதனு
க்குவரு மூதியத்தையிழந்து துன்பத்தைக்கொ
ண்டதனாற்பேதையென்றும் அதன்மேலுந்தன்
னாயுதத்தையுங்கொடுத்து நிராயுதனானிலையாற்ப
தரென்றுங்கூறினார். உ-ம்,

பேதைமையென்பதொன்றியாதெனினேதங்கொண்,
டூதியம்போகவிடல்.

என்றதுன்பத்தைக்கொண்டூதியமிழத்தற்கு தாரணங்
காண்க.

ஏந்திழையாரியலாததந்திரங்கொடு, வாய்ந்
ததென்றதின்றுபல்வாளுமோர்பதரோ. *

(இ-ள்.) மனையாட்டிசொன்ன பொருந்
தாதவுபாயத்தைக்கேட்டு இவை சரிப்பட்டதெ
ன்றெண்ணியதினாலேயொருகருமத்தைச்செய்
யத்தொடங்குவோனு மொப்பற்றபதராம்,
எ-று. அறிவோடுநாணுமிழந்து பெண்ணேவ
லைப்புரிதற்கமைந்தவிவனது ஆண்டன்மையி
னும்பெண்டன்மை சிறத்தலின்மேற்கூறியப
லவகைப்பதருள்ளுந்தாழ்ந்தபதரென்பார் ஓர்
பதரென்றார். உ-ம்,

பெண்ணேவல்செய்தொழுகுமாண்மையி னாணுடைப்
பெண்ணே பெருமையுடைத்து. எ - இ - க -

வாய்ப்பறையாகவு நாக்கடிப்பாகவுஞ், சாற்றுவதொன்றைப்போற்றிக்கேண்மின், பொய்யுடையொருவன்சொல்வன்மையினால், மெய்போலும்மேமெய்போலும்மே, மெய்யுடையொருவன்சொன்மாட்டானேற், பொய்போலும்மேபொய்போலும்மே, (அதனால்) இருவர்தஞ்சொல்லையுமெழுதரங்கேட்டிருவரும்பொருந்தவுரையாமையின், மறமுறைநெறியின்வழக்கிழந்தவர்தா, மன்றுறமறுகிநின்றழுதகண்ணீர், முறைபறத்துவர்மூவர்காப்பினூஉம், வழிவழியீர்வதோர்வாளாகும்மே, பழியாவருவதூஉமொழியாதொழிவது, சுழியாவருபுனலலையாதொழிவது.

(இ-ள்.) வாய்ப்பறையாகவும் - என்னுடையவாய்தானேயொருபறையாகவும், நாக்கடிப்பாகவும் - அதனுள்ளிருக்கின்றநாவுதானேயப்பறையினையடிக்கின்றவொருகோலாகவும், (உறுதியாகஅறைந்து) சாற்றுவதொன்றை - சொல்லப்படுவதொன்றை, போற்றிக்கேண்மின் - (உங்களுடையமனமற்றொன்றிலேசெல்லாமலே) பாதுகாத்துக்கேளுங்கள், எ-று. பறையறைந்தபின் உலகிற்கு ஒன்றைத்தெரிவித்தல் உலகத்து

டையாதலால் வாய்ப்பறையாகவு நாக்கடிப்பா கவுமென்றமாத்திரமே சாற்றுவதென்றது சொல்லுவதாதலால் அதன்முன் அறைந் தென்பது சொல்லெச்சமாய்க்குறைந்து நின்றதெனக்காண்க. (அதுயாதெனின்) பொய்யுடையொருவன்சொல்வன்மையினால் - உள்ளேபொய்யைவைத்திருந்த ஒருவன்பேசுகின்றசொல்வலியினாலே, மெய்போலும்மே - மே - மெய்போலவே தோன்றும்மெய்போலவேதோன்றும், உறுதிப்பொருள்தோன்றற்கு மெய்போலும்மேஎன்பது அடுக்கிநின்றது. போலும்மெயெனமகரவொற்று விரித்தல்விகாரம். ஏகாரத்தையாறிக் கூட்டுக. மெய்யுடையொருவன் - மெய்யையுள்ளேவைத்திருந்தஒருவன், சொல்மாட்டானேல் - அதுமெய்யென்று விளங்கச்சொல்லமாட்டானாயின், பொய்போலும்மே - மே - பொய்போலவேதோன்றும் பொய்போலவேதோன்றும், சொலமாட்டானேல் என்பது - சொல்மாட்டானேல்என அகரங்குறைந்துநின்றது, ஒழிந்தனவற்றிற்கு மேற்சொல்லியபடி யிலக்கணங்காண்க. இவ்விரண்டையுமேதுவாகக்கொண்டு அதனாலென்பதனோடுகூட்டி யினிவருவனவத்தோடொட்டுக. இருவர் - ஞயின் - வழக்கு

னாக்கவந்த இருதிறத்தாருடைய வாய்மொழிகளையு மொருவனேமுதாரமடக்கி மடக்கிக்கேட்டுப்பிற்பாடு மநுநீதிநெறியோடு பொருந்தும்படியவ்விருவர்க்கும் வழக்குத்தீர்ப்புச் சொல்லவேண்டும் அவ்வாறுசொல்லானாயின், மநுமுறைநெறியிற்பொருந்த வுரையானாயினெனக்கூட்டுக. முறை- நீதி- என்பதை.

இறைகாக்குவையகமெல்லாமவனை, முறைகாக்குமுட்டாசெயின். என்பதனாற்காண்க. (பொருந்தஎன்னும்வினையெச்சம்நெறியொடுஎன்னுமூன்றனுருபையும்- இருவர்க்குமென்ற குவ்வுருபையும்முடித்துநிற்றலின், உருபுபலவடுக்கியொருபயனிலைகொண்டதெனக்காண்க. இருவர்க்கும் பொருந்தஉரையானாயின் எனவே ஒருவர்க்குப்பொருந்தவுரைப்பானாயின்என்பது அருத்தாபத்தியாற்பெறப்பட்டது- பட்டவேயதிறலேயெவ்க்காரணங்கண்டு கண்ணீர்வாளாருமெனச் செயற்கைப்பொருள்காரணமுன்வராதுக்கப்பெற்றதெனக்காண்க.)

வழக்கிழ- கும்மே- வழக்கிழந்துவிட்டமற்றொருவருடையமனமானது மிகவுங்கலங்கித்திகைத்துநின்று அழப்படுங்கண்ணீரான்து ஒழுங்குபட எல்லாக்கடவுளரோடேகூட அரியரன் அயன் என்னுமூவரும்வந்து அவ்வொருவனை சார்ந்து வழக்குத்தீர்ப்புச்சொன்னவனைக் காக்கப்புகினும் (அக்காவலாற்பயனின்றி) அவனையட்டவன்பின் அவன்சந்ததியிலேதோன்றியவர் தோன்றுவோரனைவரையும்பிளந்துகொண்டே

வருவதோர் நீர்வாளாகும், எ-று. வழிவழியென்று தனுமினித்தோன்று மவனையுமென்பது. பெற்றும். வழி- என்பது- சந்ததிக்கும், பின் - என்பதற்கும்பெயர். தேவர் மூவர் - தேவரோடுமூவர். வழிவழி- வழியின்வழி. இறுதில் இறந்ததுதழுவிய எச்சவும்மைதொக்குநின்றது. அதனால் அவனையுமவன்வழியின் வழியையுமெனப்பொருள்கொள்க. கண்ணீர்வாளாகும்- என்றது ஏகதேசவுருவகவலங்காரம்.] பழியாவருவது உமொழியாதொழிவது- (அதுவுமன்றி) நிந்தையென்பதுமோ எக்காலமும்வருவதுட்ஒழிவது மொழியாது, இறுதியிலும்மை விகாரத்தாற்றொக்கது - பழியா - வருவதுமொழிவது மொழியாது எனக்கூட்டுக. பழியுமொன்றின் பின்னொன்றாகவந்துகொண்டேயிருக்குமென்பதுகருத்து.] கூழியாவருடின லலைபாதொழிவது- சுழித்துவரும்நீர்த்திரளாடனது ஒழிவதேது, எ-று. ட்டாதுஎன்னும்ஜயக்கிளவியிங்கே இன்மைகுறித்துநின்றது. இதுபோலப்பழியாவருவதுமொழிவது மொழியாது. என இவ்வெடுத்துக்காட்டுஉவமையைமுற்கூட்டி யிதன்பொருளாகிய-பழியாவருவதுமொழிவதுமொழியாது. என்பதைப்பிற்கூட்டுக. வாட்பனை-

ன்பதுமுதற் - சுழியா - து - என்பதனளவுமொருதொடர். இதனுள்முன்னைய விரண்டடியுந்தனி நின்றுபொருள்முற்றினும் இன்னதென்றுடையிற்றெருக்குத்துச்சுட்டலெனவும் - மறற் - பொய்யுடை - என்பதுமுதல் சுழியா - என்பதனளவு மொருதொடராய்வகுத்துச்சுட்டல் எனவுங்கொள்க. இவ்வகுத்துக்காட்டலுள் - மெய்போலும்மே, பொய்போலும்மே, அதனால், உரையானாயின், அழுதகண்ணீர்வாளாகும்மே, (அதுவுடன்றி) சுழியாவருபுனலையாதொழிவது(அதுபோலப்) பழியாவருவது மொழிவது மொழியாது, எனக்கூட்டிநோக்கி, அதனால் என்னுமேதுவுக்கு ஏழுதாரங்கட்டிப் பொருந்தவுரைத்தல் வேண்டுமெனப் பயனிலைவருவித்து, அவ்வாறு உரையாது - ஒருதலைபொருந்தவுரைப்பானாயின் - (அதனால்) ஒருதலையழுதகண்ணீர் - வாளாகும், பழியுமாகுமெனப்பொருள்கொண்டு: அதுயாதெனின் என்னும் வினாவுரைக்கு விடையாக்கிக்கொள்க. விரிவஞ்சிவிட்டனம்பிறவிலக்கணங்களையுமுணர்ந்துகொள்க. மதுமுறைநெறியினிருவரும்பொருந்தவுரைத்தற்குதாரணம்.

சமன்செய்துசீர்தூக்குங் கோல்போலமைந்தொரு
கோடாமைசான்றோர்க்கணி. [பாற்

னைக்காண்க. இனி ஒருதலைபொருந்தவுரைத்தற்குதாரணம்- இக்குறளினுள் உவமையடைபொருளடைகளுள்ளுடன்பாட்டையெதிர்மறுத்தும் எதிர்மறையை யுடன்பாடாக்கியுங்காண்க. என்னை, சமன்செய்துசீர்தூக்குங்கோல்போலமையாதொருபாற்கோடதவிழிந்தோர்க்குப் பழி. என்க. (௫௫)

துணையோடல்லது நெடுவழிபோகேல், *

(இ-ள்.) துணையோடுகூடிச்செல்வதன்றி யஞ்சாதுதனியேநெடுந்தூரவழியுள்ள வூர்க்குச்செல்லாதை, எ-று. வழி-ஆகுபெயர். அஞ்சாது- என்பது சொல்லெச்சம். (௫௬)

புணைமீதல்லது நெடும்புனலேகேல். *

(இ-ள்.) தெப்பத்தின்மீது செல்வதன்றி நீண்ட ஆற்றுநீர்முதலியவற்றையஞ்சாது நீந்திப்போகாதை, எ-று. அஞ்சாது நீந்தியென்பது குறிப்பெச்சம். (௫௭)

வழியேயேகுகவழியேமீளுக. *

(இ-ள்.) அவ்வாறு துணையோடுபோகினும் புணைமீதுபோகினும் வழிவிலங்குதற்குமேன்மக்களஞ்சவேண்டுமாதலால் வழிதப்பாமலேபோய்வழிதப்பாமலேதிரும்புக, எ-று. ஏகுகவென்னும் வியங்கோண்முற்றெச்சப்பொருள்படநின்றது. இனியவ்வாறெனச்சுட்டாது பொதுப்படவழிதப்பாமலேசெல்கவழிதப்பாமலேதிரும்புக வினாந்துபோகவேண்டினும்.

எனவுரைப்பினும் அமையுமென்க. இதற்கு வி னைந்துபோகவேண்டினுமென்பது இசையெச் சம். இம்மூன்றிற்குங்கருத்து அஞ்சத்தகுவத ற்கு அஞ்சுவது அறிவுடைமையென்பதும் அஞ்ச த்தகுவதற்கு அஞ்சாமை பேதைமை என்பது மாம். உ-ம்,

அஞ்சுவதஞ்சாமைபேதைமையஞ்சுவ
தஞ்சலறிவார்தொழில். எ-க. (௩௮)

இவைகாணுலகிற்கிய லுமாறே. ✻

இதுபுறனடை, (இ-ள்.) உலகத்தோர்க் குநடக்கத்தக்கநெறிகளாவனவிவைபோல்வன பிறவுமாம், எ-று. காண்- ஏ-என்பன அசைநி லை, ஆறு- தொகுதியொருமை. போல்வனஎன் பது சொல்லெச்சமாய்க்குறைந்துநின்றது. இ னி இவைகாண்-என்பதை, இவைபோல்வனவெ னக்காண்க. எனவிரித்து, என, இடைச்சொல், தொக்குநின்றதெனக்கொண்டு, காண், என்ப தை முன்னிலையேவலாக்கினும் அமையும். உல கநெறிமுழுவதும் மிதனுளடங்காமையால் - இ வைகாண்- என்பதைஇவைபோல்வனபிறவுமெ ன்றுரைத்து இதைப்புறனடையெனவேண்டிற் றெனக்காண்க. (௩௯)

வாழிய நலனே வாழிய நலனே,

(இ-ள்.) எல்லா நன்மைகளும் வாழ்க, எல்லா இன்பங்களும் வாழ்க, எ-று. நலம்-என்பது தொகுதியொருமையாய் நன்மைகளையும் இன்பங்களையுங் குறித்து நின்றது. ஏகாரமிரண்டும், அசைநிலை. இனி இவ்வாறன்றி நன்மையேவாழ்ந்திருக்கக்கடவது, நன்மையேவாழ்ந்திருக்கக் கடவது, என உறுதிதோன்றற்பொருட்டுத் தேற்றேகாரமுங்கொடுத்து இருமடிவாழ்த்திலொன்றும் அமையும். இதுவாழ்த்து. (௪௰)

வெற்றிவேற்கை

முற்றிற்று.